# ஆடுகளுக்காக அழும் ஓநாய்கள்!

## தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்... முதல் பக்கத் தொடர்ச்சி

இந்தியைக் கட்டாயமாகத் திணிக்கும் சதித்திட்டத்தினை எதிர்த்து சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தை 1986ஆம் ஆண்டில் நம் உயிர்நிகர்த் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்தபோது, முன்கள வீரனாக மொழிப் போர்க்களம் கண்டவன்தான் உங்களில் ஒருவனான நான். அப்போது, கோவையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில், மொழிப் போர்த் தியாகிகளின் படங்களைத் திறந்து வைத்து உரையாற்றுகின்ற வாய்ப்பினை இளைஞரணிச் செயலாளரான எனக்கு வழங்கினார், தமிழுக்காக வாழ்ந்தவரும் தமிழாகவே வாழ்ந்தவருமான நம் தலைவர் கலைஞர்.

**“கிரேக்கத்தை எப்படியாவது கைப்பற்றி விடவேண்டும் என்று கருதி பாரசீக ஏகாதிபத்தியம் ஒரு பெரும் படையெடுப்பை நடத்தியது. எல்லையிலே ஒரு சிறு கிரேக்கப் படையின் வீரர்கள் அதனை எதிர்கொண்டு வீரமரணம் அடைகிறார்கள். அவர்களின் உடல் வீழ்ந்து கிடந்த இடத்திலே ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டது. அதில்,**

**‘இவ்வழிச் செல்லும் மக்காள் நீவீர் ஸ்பார்ட்டா சென்று பகர்வீர் -**
**நாங்கள்**
**பணியை முடித்துப் படுத்தோம்’**

**- என்ற வாசகம் எழுதப்பட்டிருந்தது. நாட்டைக் காக்கும் போரில் தங்கள் உயிரைக் கொடுத்த அன்றைய கிரேக்க வீரர்களுக்கு கழகத் தொண்டர்களாகிய நாம் சளைத்தவர்களல்ல”** என்று குறிப்பிட்டேன்.

> **சிறை கண்ட நம் உயிர் நிகர்த் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞருக்கு,கைதிகளுக்கான கட்டம் போட்ட சட்டையையும், அரைக்கால் சட்டையையும் அணிவித்து அவரது கையில் தட்டும் குவளையும் வழங்கினார்கள் அன்றைய ஆட்சியாளர்கள்.**

ஹிட்லர் ஆட்சியில் ஜெர்மன் மொழி திணிக்கப்பட்டதை எதிர்த்து செக்கோஸ்லோவியா என்ற நாடு உருவானதையும், ஆங்கில மொழித் திணிப்பை எதிர்த்து அயர்லாந்து மக்கள் நடத்திய தீரமிகு போராட்டத்தையும், பங்களாதேஷ் எனும் நாடு உருவானதற்குக் காரணம் பாகிஸ்தான் அரசின் மொழித் திணிப்பே என்பதையும், இலங்கையில் சிங்கள மொழி ஆதிக்கம்தான் அங்குள்ள தமிழர்களைத் தனி நாடு கேட்டுப் போராட வைத்திருக்கிறது என்பதையும் அந்த உரையிலே எடுத்துரைத்து, **“அரசியல் சட்டத்தினுடைய 17ஆம் பாகத்தில் ஒரு பிரிவை ஒரு தாளில் எழுதிக் கொளுத்துகின்ற போராட்டத்தை நம் தலைவர் அறிவித்திருக்கிறார். அப்படிப்பட்ட போராட்டத்தில் கொளுத்துகின்ற அந்தத் தீ, இன்றைக்கு இந்தித் திணிப்பை நடத்திக் கொண்டிருக்கிற மோசடிக்காரர்களின் எண்ணங்களுக்கு நாம் வைக்கிற எழுச்சித் தீ”** என முழங்கினேன்.

சொன்னதைச் செய்யும் இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகம் 1986 இல் இந்தித் திணிப்புக்கு எதிராக அரசியல் சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தைத் தமிழ்நாடு முழுவதும் எழுச்சியோடு நடத்தியது. மாநிலமெங்கும் தீ பரவியது. அந்தப் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறைசென்றேன். ஆயிரக்கணக்கான உடன்பிறப்புகள் தாய்மொழி காத்திட சிறை புகுந்தனர். இனமானப் பேராசிரியர் பெருந்தகை உள்ளிட்ட கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் பத்துப் பேரின் பதவியைப் பறித்தார் அ.தி.மு.க அரசின் அன்றைய பேரவைத் தலைவர்.

**“மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை”** என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வரிகளை நீதிமன்றத்தில் வாக்கு மூலமாக அளித்து, சிறை கண்ட நம் உயிர் நிகர்த் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞருக்கு,கைதிகளுக்கான கட்டம் போட்ட சட்டையையும், அரைக்கால் சட்டையையும் அணிவித்து அவரது கையில் தட்டும் குவளையும் வழங்கினார்கள் அன்றைய ஆட்சியாளர்கள். தமிழே உயிரெனக் கொண்ட நம் தலைவர் சிறைக் கொடுமைகளைச் சிரித்தபடியே எதிர்கொண்டார்.

**பதவி பறிக்கப்பட்டாலும், சிறையில் அடைத்துச் சித்திரவதை செய்தாலும், உயிரையே கொடுக்க வேண்டியிருந்தாலும் ஆதிக்க மொழித் திணிப்புக்கு இடந்தராமல் ஆருயிரான தமிழைக் காப்போம்** என்பதில் அப்போதும் இப்போதும் உறுதியாக இருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்திதான் இந்தியாவின் தேசிய மொழி என்றும், சமஸ்கிருதமே இந்தியாவின் முதன்மை மொழி என்றும் சொல்லி இரண்டையும் திணிக்க நினைக்கிறார்கள். அவர்கள் சொல்கின்ற இரண்டுமே வடிகட்டிய பொய் என்பதை வரலாறு சொல்கிறது.

**(தொடரும்)**

அன்புடன்

**மு.க. ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2056
மாசி 18
02.03.2025

---

ஒன்றிய அரசின் இந்தித் திணிப்புக்கு எதிராக அமெரிக்காவில் போராட்டம்!

# அமெரிக்க வாழ் தமிழர்கள் பதாகைகளை ஏந்தி எதிர்ப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, மார்ச் 4-

ஒன்றிய அரசின் இந்தித் திணிப்புக்கு எதிராக, அமெரிக்காவிலும் போராட்டம் வெடித்துள்ளதாக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கை மற்றும் இந்தித் திணிப்பை கண்டித்து தமிழ்நாடு முழுவதும் அரசியல் கட்சிகள், மாணவர் அமைப்பினர் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், தமிழ்நாட்டில் இந்தி திணிப்பை எதிர்த்து அமெரிக்காவிலும் போராட்டம் வெடித்துள்ளது.

அமெரிக்காவின் டல்லாஸ் நகரில் அமெரிக்கா வாழ் தமிழர்கள் ஒன்று கூடி இந்தித் திணிப்புக்கு எதிராக முழக்கங்களை எழுப்பியும், பதாகைகளை ஏந்தியும் தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர்.

அப்போது, ஒன்றிய அரசுக்கு எதிராக அவர்கள் முழக்கமிட்டனர்.

இதனிடையே, அமெரிக்க வாழ் தமிழர்களின் போராட்டத்தை சுட்டிக்காட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், மும்மொழிக் கொள்கை திணிப்பை எதிர்த்து அமெரிக்காவின் டல்லாஸ் நகரில் அமெரிக்க வாழ் தமிழர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் தமிழ் வாழ்க என்றும் கூறியுள்ளார்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

தமிழ்நாடு அரசு முதன் முதலாக மார்ச் 14-ல்

# பொருளாதார அறிக்கை தாக்கல் செய்கிறது!

*சென்னை, மார்ச் 4 -*

*தமிழ்நாடு அரசு முதன் முதலாக பொருளாதார ஆய்வறிக்கையை மார்ச் 14 ஆம் தேதி சமர்ப்பிக்கிறது.*

*தமிழ்நாடு அரசின் பட்ஜெட் கூட்டத் தொடர் வரும் 14 ஆம் தேதி தொடங்குகிறது.*

*நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அன்றைய தினமே, 2025 - 26 ஆம் நிதியாண் டிற்கான நிதி நிலை அறிக்கையை சட்டப்பேரவையில் தாக்கல் செய்கிறார்.*

*இந்நிலையில், தமிழ்நாடு அரசு முதன் முதலாக பொருளாதார ஆய்வறிக்கையையும் மார்ச் 14 ஆம் தேதி சமர்ப்பிக்கிறது. தமிழ்நாடு அரசு இது போன்ற பொருளாதார ஆய்வு அறிக்கையை முதன்முதலாக தாக்கல் செய்ய உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

---

கழகத்தலைவர் - முதலமைச்சர் 72வது பிறந்த நாள் விழா!

# கோவை மாநகர் மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள்!

## மாவட்டக் கழகச் செயலாளர் நா.கார்த்திக் வழங்கினார்!

*கோவை, மார்ச் 4-*

*கோவை மாநகர் மாவட்ட தி.மு.க.,சிங்காநல்லூர் பகுதி 2 ,வார்டு எண்54,நீலிக்கோணாம்பாளையம், மதுரை வீரன் கோவில் பகுதியில், கழகத் தலைவர், திராவிட நாயகன், அன்புத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு நடைபெற்ற ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்,மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் கலந்து கொண்டு, ஏழை எளிய மக்கள் 500 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.*

*தமிழ்நாட்டின் நலன்களையும் எதிர்காலத்தையும் யாருக்காகவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம் என உறுதிமொழி எடுக்கப்பட்டது.*

*சிங்காநல்லூர் பகுதி 2 திமுக செயலாளர் மு.சிவா முன்னிலையில், 54 வது வார்டு செயலாளர் கே. ஆனந்தகுமார் தலைமையில் விழா நடைபெற்றது.*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக நேற்று முன்தினம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஒருங்கிணைந்த போதை மீட்பு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்களை திறந்து வைத்ததை தொடர்ந்து, நீலகிரி மாவட்டம், உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசின் தலைமை அரசு கொறடா கா.ராமச்சந்திரன் கலந்துகொண்டு பார்வையிட்டார். நிகழ்ச்சியில் உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம். ராஜு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர் கீதாஞ்சலி உட்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

---

# அரியலூரில் மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## அமைச்சர் சா.சி. சிவசங்கர் - முனைவர் சபாபதி மோகன் பங்கேற்பு!

*அரியலூர், மார்ச் 4-*

*அரியலூர் மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் அரியலூர் புறவழிச்சாலையில் உள்ள ரிதன்யா மஹாலில் கழக சட்டதிட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா. சந்திரசேகர் தலைமையில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ. க.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் அரியலூர் மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், சட்டமன்ற தொகுதி மேலிட பொறுப்பாளர்கள் அரியலூர் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர் முனைவர் சபாபதிமோகன், குன்னம் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர் ஏ.கே. அருண், ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர் கலா சுந்தரமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.*

*நடைபெற்ற கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு கீழ்க்கண்ட தீர்மானங்கள் குறித்து பேசியதாவது :-*

*தீர்மானம் 1,*

*மார்ச் 1 ஆம் தேதி 72 வது பிறந்தநாள் காணும் இந்திய அளவில் உறுதியான கூட்டணி அமைத்து தொடர் வெற்றிகளை குவித்து ஒன்றிய அரசின் பாரபட்சமான நிதிபகிர்வு கூட்டாட்சி தத்துவத்திற்கு விரோதமாகச் செயல்படும் ஆளுநர், அவதூறு பரப்பும் மக்கள் விரோத சக்திகள் உள்ளிட்ட பல்வேறு இடையூறுகளை தாண்டி மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றி நல்லாட்சி நடத்தி வரும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாவட்டக் கழகம் வாழ்த்துகளைத் தெரிவிக்கிறது.*

*தொடர்ந்து கழகத் தலைவர் அவர்கள் இதே உற்சாகத்துடன் மக்கள் பணியை மென்மேலும் தொடர மாவட்ட கழகம் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறது.*

*தீர்மானம், 2*

*இளையோர் எழுச்சி நாளான கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை ஏழை எளியோர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது, கல்வி உதவி, மருத்துவ உதவி, என மக்களுக்கு பயனுள்ள வகையில் வழங்கி கொண்டாடுமாறு இக்கூட்டத்தில் கேட்டுக்கொள்ளப்படுகிறது,*

*தீர்மானம் 3*

*ஜெயங்கொண்டம் அருகில் 15 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் விதத்தில் காலனி தொழிற்சாலை பூங்கா, அரியலூர் மாவட்டத்தில் உள்ள நதியனூர் மற்றும் வெற்றியூர் கூட்டு குடிநீர் திட்டம், ஜெயங்கொண்டம் மற்றும் உடையார்பாளையம் நகரங்களுக்கான கூட்டு குடிநீர் திட்டங்கள், அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையத்திற்கு 4, கோடியே 30 லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டிடம்,*

*அரியலூர் வட்டம் வாரணவாசி கிராமத்தில் மருதயாற்றின் குறுக்கே 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய தடுப்பணை, அரியலூர் மாவட்டத்தில் இருக்கும் துணை சுகாதார நிலையங்களில் வாடகை கட்டடத்தில் இயங்கி வரும் 35 துணை சுகாதார நிலையங்களுக்கு 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சொந்த கட்டடங்கள், கால்நடை பராமரிப்பு துறைக்கு ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் 3 கோடி 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டிடம் மற்றும் அரியலூர் மாவட்டத்தில் 101.50 கோடி மதிப்பீட்டில் அனைத்து நீதிமன்றங்களும் ஒரே இடத்தில் செயல்படக்கூடிய வகையில் ஒரு நீதிமன்ற கட்டிடம் ஆகியவற்றை அறிவித்த கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.*

*தீர்மானம் 4,*

*மூன்றாவது முறையாக ஈரோடு சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்று தொடர் வெற்றிகளை குவித்து வரும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் திராவிட மாடல் ஆட்சி நல்லாட்சி என்பதற்கான நற்சான்றிதழாக எதிரில் நின்ற அனைத்து வேட்பாளர்களின் கட்டுத்த தொகையை இழக்கும்படியும், மாபெரும் வெற்றியை கழகத்திற்கு பெற்றுத்தந்த ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் இக்கூட்டத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.*

*தீர்மானம்,5*

*தமிழ்நாட்டுக்கு தொடர்ந்து நிதி வழங்குவது பாரபட்சம் காட்டுவதுடன் தொடர்ச்சியாக தமிழ்நாடு என்று பெயர் இல்லாமலேயே நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யும் மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. அரசை கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.*

*தீர்மானம் , 6*

*மாநில அரசின் உரிமைகளை பறிப்பதுடன் கல்வியை காவிமயமாக்கும் வகையில் பல்கலைக்கழக மானிய குழுவையும் பின்னிருந்து இயக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் மும்மொழிக் கொள்கையை திணிக்க பார்த்தும், நிதிப் பகிர்வில் தமிழ்நாட்டிற்கு பாரபட்சம் காட்டும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் இக்கூட்டத்தின் சார்பில் கண்டிக்கிறது.*

*தீர்மானம் 7*

*மதவாத பா.ஜ.க. தமிழ்நாட்டில் காலூன்ற எவ்வளவோ முயற்சிகள் செய்தாலும், அதை முறியடிக்கும் தமிழ் நிலத்தின் தன்மான தடுப்புச் சுவராக விளங்குபவர் தந்தை பெரியார். நேரடியாக திராவிட இயக்கத்தை வீழ்த்த முடியாமல் கூலிகளை அமர்த்தி பெரியாரின்சிந்தனைகளையும் திராவிட இயக்கத்தையும் இழிவுபடுத்தி, எப்படியாவது தமிழ்நாட்டில் வேரூன்றப் பார்க்கிறது பா.ஜ.க.*

*அந்த மதவாத சக்திகளின் கைக்கூலிகளாய், தந்தை பெரியார்மீது ஆதாரமற்ற அவதூறுகளை அள்ளி வீசும் நாசகார சக்திகளை வன்மையாக கண்டிக்கிறோம். தமிழர்களின் சிந்தனைகளில் இருந்து பெரியாரை அகற்ற வேண்டும், திராவிடத்தை வீழ்த்த வேண்டும் என்று பல ஆண்டுகளாகப் பலர் முயன்றும் முடியாத காரியம், இப்போதும் எப்போதும் நிறைவேற போவதில்லை என்பதை இந்தக் கூட்டம் ஆணித்தரமாக எடுத்துரைக்கிறது.*

*என அமைச்சர் சா.சி. சிவசங்கர் பேசினார் .*

*இக்கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் து.அமரமூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திரசேகரன், லதா பாலு,*

*மாவட்டப் பொருளாளர் இராஜேந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர், இரா.கென்னடி, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், மா.அன்பழகன், ரெங்க.முருகன், கோ.அறிவழகன், ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், ஒன்றிய பொறுப்பாளர் தனவேல்,*

*நகர கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ. கொ.கருணாநிதி, பேரூர் செயலாளர்கள் ப.கோபாலகிருஷ்ணன், அல்போன்ஸ்,*

*நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.பாலு, ஆர்.எம். அன்பழகன், சி.ஆர்.எம். பொய்யாமொழி, வி.எம். ஷாஜகான், சுமதி கருணாநிதி, மாவட்ட அணி அமைப்பாளர்கள் தெய்வ. இளையராஜா, கே.சி.லூயி கதிரவன்,*

*எஸ். ஆர்.இராமராஜன், க.தர்மதுரை, என்.ஆர். ராமதுரை, தங்க. ராமகிருஷ்ணன், ஆதி. இளங்கோவன், அந்தோணிசாமி, பானுமதி ராஜேந்திரன், செ. இளஞ்செழியன், எம். ஜி. ராஜேந்திரன், மீனா சாமிநாதன், ரவிக்குமார், குலோத்துங்கன், வை. முருகானந்தம், க. கருப்புசாமி, க. செல்வராஜ், ம.ஜெயக்குமார், பொன். செல்வம், அருண் ராஜா, இளங்கோவன், சஞ்சய்குமார் ஜோ.வின்சன் ராஜா மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், ஊராட்சிகழக தோழர்கள், அனைத்து அணி நிர்வாகிகள், கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.*